*** 431 வினா—திரு. சு. துரைசாமி:** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகையுள்ள திருப்பூரில் ஒரு காவலர் நிலையம் உள்ளது போதாது என்றும் இரண்டு காவலர் நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (I.G.) அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளாரா ?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*** 432 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், செந்துரையில் ஒரு புதிய காவல் நிலையம் (Police Station) அமைக்க ஏதேனும் செயற் குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்பெறும்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரசினர் கைரேகைப் பதிவுக் கழகம்

*** 433 வினா—திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசாங்க கைவிரல் ரேகை பதிவு அலுவலகம் பற்றி மதிப்பீடு கமிட்டி (Estimate Committee) ஆய்வுரை, பரிந்துரை வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) மதிப்பீட்டுக் குழுவின் (1963-64) பரிவுரைகளை ஒட்டி சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், வேலூர் கைரேகை பதிவுக் கழகப் பணியாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கச் செயற்குறிப்புகளை அனுப்பினர். அவை நீண்ட ஆய்வுக்குப்பின் மறுக்கப்பட்டன.

திரு. மா. பா. சாரதி : கைரேகைப் பதிவு நிலையம் நீண்ட நாட்களாக வேலூரில் இருப்பதாலும், பலர் அங்கேயே வசிப்பதாலும், அதை வேலூரில் இருந்து மாற்றுமல் இருப்பதற்கு,

1967 நவம்பர் 25]

அப்படி ஏதாவது ஒரு சந்தர்ப்பம் பின்னால் ஏற்பட்டாலும் அதை அரசு மறுக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கேள்வி, அவர்களுக்கான சம்பள விகிதத்தைப் பற்றியது. அது வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படுமா என்பது பற்றி தனிக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: போலீஸ் இலாகாவிலேயே இது மிக முக்கியமானதொரு இலாகா. இந்த இலாகாவை இன்னும் விரிவுபடுத்தினால் மற்றயிடங்களில் திருடுகள் நடைபெறுவதைக் கண்டு பிடிக்க ஏதுவாகயிருக்கும். ஆகவே, இந்த இலாகாவை விரிவுபடுத்திச் சீர்திருத்தம் செய்ய தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கைரேகை இலாகா குற்றவாளிகளைப் பற்றியது. குற்றங்கள் அதிகரிக்கும் என்று உறுப்பினர் கருதுவதற்காக வருந்துகிறேன்.

ஆபாச சுவரொட்டிகளுக்குத் தடை

* 440 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்
திரு. கே. வினயகம் :
திரு. டி. மார்டின் :
} மதிப்பிற்குரிய

அரிஜன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆபாச சினிமாப் படங்களையும், ஆபாச சுவரொட்டிகளையும் தடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) ஆபாசத் திரைப்படங்கள் காண்பிப்பதைத் தடுப்பதற்கான அதிகாரம் மாநில அரசிடம் இல்லை. ஆபாச சுவரொட்டிகளும் திரைப்பட விளம்பரங்களும் வெளியாவதைத் தடுக்க இம்மாநில அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. திரைப்பட ஆபாசச் சுவரொட்டிகள், விளம்பரங்கள் ஒட்டுவதைக் கண்காணித்துக் குற்றவாளிகள் மீது இ.பி.கோ. 292-ம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு சென்னை நகரப் போலீஸ் ஆணையருக்கும், சென்னை கலெக்டரைத் தவிர மற்ற கலெக்டர்களுக்கும் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்துத் தம் கீழுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கும் கட்டளை பிறப்பிக்குமாறு போலீஸ் துறைத் தலைவரும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

திரு. வி.கே. கோதண்டராமன்: இப்போது ஆபாச சுவரொட்டிகள் விஷயத்தில் நடவடிக்கைகள் எடுக்குமாறு போலீஸ் அதிகாரிகளுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள்